# ஹமில்டன், ரணதுங்கவை பதவி நீக்க வேண்டும்

விலை ரூபா 5.00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆனி 25 இதழ் 149
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 09 — 07 — 1992

## "ஒப்சேவர்" சீற்றம்

(கொழும்பு)
கூட்டுப்படைத் தலைமைத் தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்கவையும், பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஜெனரல் சிறில் ரணதுங்கவையும் பதவி நீக்கவேண்டுமென்றும் இவர்கள் இப்பதவிகளுக்கு தேவை தானு என்றும் அரசு

(4ம் பக்கம் பார்க்க)

## இராணுவத் தலைமையில் பெரும் பிளவு?

(கொழும்பு)
ஸ்ரீலங்கா இராணுவத்தின் தலைமைப் பீடத்தில் பெரும் பிளவு ஏற்பட்டிருப்பது வெட்டவெளிச்சமாகத் தெரிவதாகக் கொழும்பில் உள்ள 'ஏ. எவ். பி' செய்தியாளர் விமர்சித்துள்ளார்.

ஒப்சேவர் பத்திரிகையில் வெளிவந்த, ஹமில்டன், சிறில் ரணதுங்க ஆகியோருக்கு எதிரான விமர்சனமே இப்பிளவைக் காட்டுவதாகவும் அச்செய்தியாளர் கூறினர்

[4-ம் பக்கம்பார்க்க]

## படை குவிப்பு

[வவுனியா]
வவுனியா செட்டிகுளம் பகுதியில் பெருமளவு ஸ்ரீலங்கா துருப்புக்கள் குவிக்கப்பட்டு காவலரண்களை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுவருவ

(4-ம் பக்கம் பார்க்க)

### ★ ஏன் புலிகளை தடைசெய்யக்கூடாது

# விடுதலைப் புலிகளுக்கு நேற்று

# தமிழக அரசு பகிரங்க கடிதம்

(சென்னை)
இந்தியாவில் விடுதலைப் புலிகள் ஒரு சட்ட விரோத அமைப்பென்று, ஏன் அதனை தடைசெய்யக் கூடாது என்பதற்கான காரணங்களை அடுத்த 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் தெரிவிக்குமாறு தமிழகஅரசு நேற்று விடுதலைப்புலிகளுக்கு பகிரங்கமாக அழைப்பு விடுத்துள்ளதாக பி. பி. ஸி. தெரிவித்தது

யாழ்ப்பாணத்திலுள்ள புலிகளின் தலைமைப் பணிமனைக்கும், லண்டனிலுள்ள அதன் அனைத்துலக செயலகத்திற்கும் லண்டனில் வாழ்ந்துவரும் புலிகளின் பொறுப்பாளர்களில் ஒருவரான கே. ஆர். சேகர் என்பவருக்கும் இவ்வறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையில், புலிகள் இயக்கம்மட்டுமல்ல, இந்திய மண்ணில் செயல்படும் புலிகளின் ஆதரவாளர்களும் இத்தடையில் உள்ளடக்கப்பட்டுள்ளனராம்.

இலங்கையும், தமிழகமும் மிக அருகிலிருப்பதால் புலிப் படையினர் தமிழகத்தின் அமைதிக்கும் அச்சுறுத்தலாகவே

(4ம் பக்கம் பார்க்க)

## இலங்கை தூதரகம் முன் 20 ம் திகதி ஆர்ப்பாட்டம்

[சென்னை]
இலங்கையில் இராணுவத்தினர் மேற்கொண்டுவரும் தாக்குதல்களை கண்டித்தும் அதற்கு எதிராகவும் சென்னையிலுள்ள இலங்கை துணை தூதரகத்துக்கு முன்னால் இம்

[4-ம் பக்கம் பார்க்க]

## வீழ்ந்த விமானத்தின் பெறுமதி ரூ. 15 கோடி

(கொழும்பு)
விடுதலைப் புலிகளால் கடந்த ஞாயிற்றுக்கிழமை இயக்கச்சி பகுதியில் சுட்டு வீழ்த்தப்பட்டவை 8 - ரக சீன சகடை விமானத்தின் பெறுமதி 15 கோடி ரூபா என

[4-ம் பக்கம் பார்க்க]

## இந்திய படை வருகைக்கு முந்திய காலம் பற்றி விசாரணை

(புதுடில்லி)
இலங்கையில் இந்தியப் படைகள் போய் இறங்குவதற்கு முற்பட்ட காலகட்டம் பற்றிய விசாரணைகள் மேற்கொள்ளப் படவேண்டுமென ராஜீவ் காந்தி கொலைகொடார் பாக விசாரணை நடத்திவரும் மத்திய புலனாய்வுக் குழுவின்

[4ம் பக்கம் பார்க்க]

## துப்பாக்கி நபர்கள் சூடு மூன்று தமிழர் பலி

(கொழும்பு)
மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த வந்தாறுமூலையில் நேற்றுமுன்தினம் இனந்தெரியாத குழுவினர் இரு தமிழ்மக்களை சுட்டுக்கொன்றதாக கூறப்படுகிறது.

ஈரடியனூற்றில் நேற்றுமுன்தினம் இந்துக் கோயிலில்

[4-ம் பக்கம் பார்க்க]

### ★ வெற்றிலைக்கேணியில்

## ஆயிரக்கணக்கான படையினர் கடற்பகுதியில் தரையிறக்கம்

(யாழ்ப்பாணம்)
வெற்றிலைக்கேணி கடற்கரைப் பகுதியில் பாரிய கப்பல்கள் மூலம் ஆயிரக்கணக்கில் படையினர் தரையிறக்கப்பட்டு வருவதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தற்போது வாடியடிச் சந்தியில் நிலைகொண்டுள்ள படையினர் தமது நிலைகளை பலப்படுத்தி வருகின்றனர். இதனால் கடந்த இரு தினங்களாக இப்பகுதியில் மோதல்கள் எதுவும் இடம்பெறவில்லை.

வாடியடிச் சந்தியிலிருந்து முன்னேறும் பாரிய இராணுவ நடவடிக்கைக்காகவே வெற்றிலைக்கேணியில் பெருமளவு படையினர் குவிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

### பல்கலைக்கழக

## வெட்டுப் புள்ளி வெளியானது

(கொழும்பு)
கல்வியாண்டு 1991 - 92க்கான பல்கலைக்கழக அனுமதிக்கான குறைந்தபட்ச தேவையான வெட்டுப்புள்ளி சட்அவுட் மாக்ஸ் விபரங்கள் பல்கலைக்கழக மானியக் குழு வெளியிட்டுள்ளது.

இந்த விபரங்கள் யாவும் நேற்றைய கொழும்புப் பத்திரிகைகளில் வெளியாகியுள்ளன. (சே)

## 18,841 குடும்பங்களுக்கு மண்ணெண்ணை விநியோகம்

(யாழ்ப்பாணம்)
தற்போதைய போர்க்கால சூழ்நிலையைச் சாட்டாக வைத்து கொள்ளை இலாபம் பெறும நோக்குடன் அத்தியாவசியப் பொருட்களில் ஒன்றான மண்ணெண்ணையைப் பதுக்க முயன்ற வர்த்தகர்களிடமிருந்து தமிழீழ காவல்துறையினர் பெருமளவு மண்ணெண்ணையைக் கைப்பற்றியுள்ளனர். இவ்வாறு கைப்பற்றப்பட்ட மண்ணெண்ணையை குடும்பத்திற்குத் தலா இரண்டு லீற்றர் வீதம் 18,841 குடும்பங்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது

பொதுமக்களால் தரப்படும் தகவல்களின் அடிப்படையில்

(4ம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறை கடலில் இரு மீனவர் கைது

(பருத்தித்துறை)
பருத்தித்துறை கடலில் மீன்பிடிக்கச் சென்ற இரு இளைஞர்களை கடற்படையினர் கைதுசெய்துள்ளனராம்.

மயிலிட்டியைச் சேர்ந்த அ. அன்ரன் விஜயராஜா (வயது 18) ஐ சிவநேசசிங்கம் (வயது 20) ஆகிய இருவரும் பருத்

[4-ம் பக்கம் பார்க்க]

## கர்நாடக அணைக்கட்டை தகர்க்கப் போவதாக எச்சரிக்கை

(பெங்களூர்)
கர்நாடக மாநிலத்திலுள்ள கிருஷ்ணசாஹர் அணைக்கட்டைத் தகர்க்கப்போவதாக இனந்தெரியாதோர் எச்சரிக்கை விடுத்துள்ளதாக கர்நாடகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த எச்சரிக்கையை அடுத்து மேற்படி அணைக்கட்டுக்குப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதுடன், கர்நாடகத்தின் பல பகுதிகளிலும் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் கர்நாடகம்-தமிழ்நாடு எல்லைப் பகுதிகளிலும் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டு, சோதனைகளும் முடுக்கி விடப்பட்டுள்ளதாக 'இந்து' பத்திரிகை தெரிவித்துள்ளது. [சி]

## தமிழ்க் கட்சிகள் முஸ்லிம் காங்கிரஸ் சந்திப்பு

(கொழும்பு)
நான்கு அம்சத் திட்டத்தினை தயாரித்த 7 தமிழ் கட்சிகளின் பிரதிநிதிகள நேற்று முன்தினம் முஸ்லிம் காங்கிரஸ் தலைமைப் பீடத்தைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

தங்கள் திட்டத்திற்கு ஆதரவு தேடுமுகமாக தமிழ் கட்சிகள் ஏற்கனவே ஏனைய கட்சித் தலைவர்களையும் சந்தித்திருந்தன

இவர்களின் நாலம்சத் திட்டத்தை சுதந்திரக்கட்சி நிராகரித்ததும் தெரிந்ததே. (கே)

# வரி விளம்பரம்

## சோபிதா

பாடசாலை உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள், மொத்தமாகவும், சில்லறையாகவும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம், 'சோபிதா' 363, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். (ஏ-2207)

## வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தெய்வு, வாத ரோகங்கள், வலிப்புநோய் பீனிசம், தலையிடி, தலை கால் அவியல், சருமநோய்கள் மாதவிடாய்க் குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியர், சி. இராசரத்தினம், 121, 2-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (சி-6436)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து சட்ட மருத்துவ துறையில் பேராசிரியர் பதவிக்கான விண்ணப்பங்கள் 1992-09-30ம் திகதிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

சம்பள அளவுத்திட்டம்:

பேராசிரியர் தரம்-II

ரூபா 12, 200 - 6 x 300- 14, 000/-

[மாதமொன்றுக்கு]

மேற்குறித்த பதவிக்கான விண்ணப்பப்படிவங்களையும் இதர விபரங்களையும் இப்பல்கலைக்கழகத் தாபனக்கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை தபாலில்பெற விரும்புவோர் விண்ணப்பப்படிவங்களுக்கான வேண்டுகோளுடன் 23x10 ச. மீற்றர் அளவுடைய சுயமுகவரியிடப்பட்ட முத்திரை ஒட்டப்பட்ட கடித உறை இணைத்தனுப்பப்படல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத் தாபனங்கள், நியதிச் சட்டசபைகள் என்பவற்றிலுள்ள விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகர்களின் சிறப்பு தகைமைகளையும்அல்லது அனுபவத்தையும் கவனத்திற்கொண்டு சம்பள அளவுத்திட்டத்தின் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

குறிப்பு: ஒப்பந்த அடிப்படையிலான நியமனமும் கவனிக்கப்படும்.

பதிவாளர்

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1992-07-07.

(எ-2279)

## நோவு வைத்தியம்

ஒட்டகப்புலம் சமத்தர் நோவு எண்ணை கிடைக்குமிடம். எஸ். ரி. மெடிக்கல்ஸ், 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-6448)

## தேவை

வாடகைக்கு இடம் தேவை தொடர்பு: ''சீ அன்புஜீ'' Shyanbugee) ஆலடி வைரவர் கோவிலடி, உயரப்புலம், ஆனைக்கோட்டை. (சி-6508)

## பாடசாலைகளில் பொருட்கள் கையிருப்பு

(உடுவில்)

பாடசாலைகளில் ஒழுங்காக வருடாந்த பொருள் கையிருப்புக் கணக்கெடுத்தல், வருடாந்த விபரத்திரட்டு சேகரித்தல் போன்ற நிகழ்வுகள் தவறாது நடைபெறவேண்டுமென மாகாணக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (109)

## விவசாயக் கழகம்

[வட்டு கோட்டை]

வட்டுக்கோட்டை திருநாவுகரசு மகா வித்தியாலயத்தில் விவசாயக் கழக அங்குரார்ப்பண வைபவம் அண்மையில் அதிபர் நா. க. தங்கரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

இவ்வைபவத்தில் விவசாய ஆசிரியை திருமதி கிருசைநாயகி ஜெயானந்தம், விஞ்ஞான ஆசிரியை செல்வி இராஜேவரி பேரம்பலம் ஆகியோர் உரையாற்றினர். [139]

## சேதமடைந்த பாடசாலைகள் விபரம் சேகரிப்பு

(உடுவில்)

இராணுவ நடவடிக்கைகளினால் சேதமடைந்த பாடசாலைகளின் விபரங்களையும், சேதமடைந்த கட்டடங்களின் மதிப்பிடப்பட்ட பெறுமதி, பாடசாலைக் கட்டடம் அமைந்துள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவு போன்ற விபரங்களை அனுப்பிவைக்குமாறு மாகாணக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. [109]

# இராமநாதன் கல்லூரி பரிசளிப்பு விழா

நிகழும் ஆனித்திங்கள் 26-ம் நாள் (10 07-92) வெள்ளிக்கிழமை பிற்பகல் 1-30 மணிக்கு இராமநாதன் கல்லூரிப் பரிசளிப்பு விழா கல்லூரி மண்டபத்தில் இடம்பெறும்.

பிரதம விருந்தினர்:

**திரு. இ சுந்தரலிங்கம் அவர்கள்**
(வடமாநிலக் கல்விப் பணிப்பாளர்)

சிறப்பு விருந்தினர்கள்:

**திரு. இ. சிவானந்தன் அவர்கள்**
(பிரதிக் கல்விப் பணிப்பாளர், மருதனார்மடக் கோட்டம்)

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
**அவர்கள்**
(தலைவர், தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானம்)

பெற்றோர், பழைய மாணவிகள், அபிவிருத்திச் சபையினர், நலன்விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

★ தனிப்பட்ட அழைப்புக்கள் இல்லை ★

அதிபர், ஆசிரியர்கள், மாணவிகள்.

(ஏ-2231)

# முக்கிய அறிவித்தல்

## வடமாகாண அரசாங்க ஒப்பந்தகாரர் சங்கம்

1. கட்டடம்
2. நீர்ப்பாசனம்
3. நீர்வள வடிகால்
4. மின்சாரம், இலத்திரனியல்
5. வீதி அமைத்தல், திருத்துதல்
6. உருக்குத் தளபாடம், உருவாக்கல்
7. மரத்தளபாடம்
8. காரியாலய உபகரணங்கள்

வடமாகாணத்தில் உள்ள திணைக்களங்கள்/கூட்டுத் தாபனங்கள்/வங்கிகள்/மாநகரசபைகள்/நகர பிரதேச சபைகள் ஆகியவற்றில் காணப்படும் மேற்கண்ட வேலைகளை உள்ளடக்கிய சகலவிதமான ஒப்பந்த வேலைகளையும் சங்கத்தில் அங்கம் வகிக்கும் ஒப்பந்தகாரர்கள் மாத்திரமே மேற்கொள்ளமுடியும் என்பதை இத்தால் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்றைய காலகட்டத்தில் மேற்கண்ட வேலைகளை மேற்கொள்ளும் நிலையில் உள்ளீர்களா எனத் தீர்மானிக்கும் பொருட்டு சங்கத்தில் ஏற்கனவே பதிவு செய்துள்ளவர்களையும் இதுவரை பதிவு செய்யாதவர்களையும் வருகின்ற 15-07-1992க்கு முன் சங்கக் காரியாலயத்தில் தொடர்பு கொண்டு உங்கள் பெயர்களைப் பதியும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

மு. சி. சண்முகராசா,
கௌரவ செயலாளர்.

எ 4/1, சம்பியன் வீதி,
கொக்குவில்.

(ஏ-2280)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இலங்கை

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து உடற்கல்விப் பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் 1992-7-31வரை என்னால் பெற்றுக்கொள்ளப்படும்.

சம்பள அளவுத் திட்டம்:

ரூபா 6000 - 10 x 200 - 8000/-

(வினைத்திறமை காண் தடை)-8250 - 7 x 250- 10, 000/- மாதமொன்றுக்கு.

தகைமைகள்:

(அ) உடற்கல்வியில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டம்அல்லது ஒத்த அல்லது உயர் தகைமைகளுடன் அத்தகைய பட்டத்தைப் பெற்றதன் பின்னர், பொழுதுபோக்கு நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்குபடுத்துவதிலும், செயற்படுத்துவதிலும் குறைந்தபட்சம் 12 வருட அனுபவம்.

அல்லது

[ஆ] அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் பட்டத்துடன் அங்கீகரிக்கப்பட்ட பட்டப்பின் அல்லது உயர்தொழில் தகைமைகளுடன் அத்தகைய பட்டத்தைப் பெற்றதன் பின்னர் பொழுதுபோக்கு நிகழ்ச்சித் திட்டங்களைஒழுங்குபடுத்துவதிலும் குறைந்த பட்சம் 15 வருடஅனுபவம்

வயது: 45 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

தெரிவு: நேர்முகப் பரீட்சை மூலம்

மேற்குறித்த பதவிக்கான விண்ணப்பப் படிவங்களையும், இதர விபரங்களையும் இப்பல்கலைக்கழக தாபனக்கிளையின் சிரேஸ்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களுக்கான வேண்டுகோளுடன் சுயமுகவரியிட்டு முத்திரையொட்டப்பட்ட 23 x 10 ச. மீற்றர் அளவுடைய கடித உறை அனுப்பபடல்வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள் அரச கூட்டுத் தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் சிறப்புத் தகைமைகளையும்/ அல்லது அனுபவத்தையும் கவனத்திற்கொண்டு சம்பள அளவுத்திட்டத்தின் பொருத்தமான படியில் அவர் வைக்கப்படுவார்.

விண்ணப்ப முடிவுத் திகதியின் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்களும், தெளிவில்லாமல் விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்களும் தள்ளுபடி செய்யப்படும்.

உடற்கல்விப் பணிப்பாளர் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையிலான நியமனமும் பரிசீலனை செய்யப்படும். ஒப்பந்த அடிப்படையிலான நியமனத்திற்கு வயதெல்லை ஏற்புடையதல்ல.

— பதிவாளர்

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1992-07-07. (எ 2232)

## நல்லூர் உற்சவம் பற்றிய கலந்துரையாடல்

(கொழும்புத்துறை)

யாழ். நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவம் ஆகஸ்ட் 3ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

மேற்படி உற்சவகால ஏற்பாடுகள் குறித்து பூர்வாங்க ஒழுங்குகள் சம்பந்தமான முடிவுகளை எடுப்பதற்கு யாழ். மாநகர ஆணையாளர் அலுவலகத்தில் நாளை 10ம் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 2-00 மணிக்கு யாழ். மாநகராட்சி மன்ற ஆணையாளர் திரு. வே. பாலசிங்கம் தலைமையில் கலந்துரையாடல் நடைபெறும்(74

## அஞ்சலிப் பிரசுரம்

[பண்டத்தரிப்பு]

சுழிபுரம் கிழக்கு வீரபத்திரர் சனசமூக நிலையம், விவேகானந்தா விளையாட்டுக் கழகம் ஆகியன புல்லாவெளியில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட சுழிபுரம் வடக்கை சேர்ந்த வீரவேங்கை தமிழினியனுக்கு [எதிர்மன்னசிங்கம்-ஆனந்தவேல்) அஞ்சலி செலுத்தி பிரசுரம் வெளியிட்டுள்ளனர். சுழிபுரம் சிவத்தொண்டன் மக்கள் களஞ்சியம் உட்பட பல நிறுவனங்களும் அஞ்சலிப் பிரசுரங்களை வெளியிட்டுள்ளன. (72)

## ஐ. வி. கழகம வெற்றி

[பண்டத்தாப்பு]

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவு விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் அண்மையில் நடாத்தப்பட்ட வலைப் பந்தாட்டப் போட்டியில் பண்டத்தரிப்பு ஐக்கிய விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றுள்ளது. பண்டதரிப்பு மகளிர் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டியில் பண்டத்தரிப்பு ஐக்கிய விளையாட்டுக் கழகம், மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழகத்தை 21—5 என்ற வித்தியாசத்தில் வெற்றி பெற்று ''சாம்பியன்'' ஆனது. (72]

## பரிசுகள்

[மானிப்பாய்]

ஆனைக்கோட்டை ஸ்ரீ மூத்தநாயனர் ஆலய உற்சவ சாலதத்தில் தொடர்ச்சியாக இடம் பெற்ற கதாப்பிரசங்கத்தின் பொழிப்பிலிருந்து கேள்விகள் தேர்ந்தெடுக்கப்பட்டுமாணவ மாணவியருக்கு எழுத்துப் பரீட்சையொன்று நடாத்தப்பட்டது.

இதில் அதிக புள்ளிகளைப் பெற்ற 11 பிள்ளைகளுக்கு ஆலய முகாமையாளரினால் பரிசுகள் வழங்கப்பட்டது.

## பண்ணிசைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

காரைநகர் வாரிவளவு நல்லியக்கச்சபை காரைநகர் மாணவர்களுக்காக நடாத்தும் அமரா கந்தையா தர்மலிங்கம் ஞாபகார்த்த திருமுறைப் பண்ணிசைப் போட்டி (ஆண்டு 6- 13) 12ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ் நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

யாழ்ப்பாணம்

# நீண்டகாலம் பணியாற்றும்

## எழுதுவினைஞர்களுக்கு இடமாற்றம்

(மானிப்பாய்)

வடக்கு-கிழக்கு மாகாண சபையின் கீழுள்ள அரச திணைக்களங்களில் நீண்டகாலமாகப் பணிபுரிந்துவரும் எழுதுவினைஞர்கள் விரைவில் வெவ்வேறு மாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

இது சம்பந்தமான பட்டியல்களைத் தயாரிக்கும் நடவடிக்கையில் வடக்கு - கிழக்கு மாகாண சபையின் உள்துறை அமைச்சு தீவிரமாக ஈடுபட்டு வருவதாகத் தெரியவந்துள்ளது.

இதுபற்றி மேலும் அறிய வருவதாவது: யாழ்ப்பாணம், கிளிநொச்சி போன்ற தமது சொந்த மாவட்டங்களில் பணிபுரியும் 50 வயதிற்குட்பட்டவர் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கும், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை போன்ற மாவட்டங்களில் பணிபுரிபவர்கள் யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களுக்கும் இடமாற்றம் செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (71)

# தமிழகத்தில் அகதி முகாமில் இளம்பெண் தற்கொலை

(சென்னை)

பாண்டிச்சேரி அகதிமுகாமில் தங்கிய இலங்கை பெண் தன் காதலன் சீதனம் இல்லாமல் திருமணம் செய்ய மறுத்ததால் தற்கொலைசெய்து கொண்டார்.

இந்திய அகதி முகாமில் தங்கிய பெண், சீதனம் கொடுக்கக்கூடிய நிலையில் தான் இல்லையென்பதை காதலனுக்கு விளக்கினர். காதலன் சீதனம் பெற்ற பின்பே திருமணம் என வற்புறுத்தினர்.

இதனால் மனவேதனையுற்ற பெண் விஷ மருந்தை உட்கொண்டு தற்கொலை செய்து கொண்டார். (கே)

# இடம் பெயர்ந்த 55 குடும்பங்களுக்கு குடிசைகள் வழங்கப்பட்டது

[உடுவில்]

அராலிக் கிராமத்திலிருந்து நவாலி மகாவித்தியாலயத்தில் இடம்பெயர்ந்திருந்த ஐம்பத்தைந்து அகதிகள் குடும்பங்களுக்கு சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் மூலமாக குடிசைகள் அமைத்துக் கொடுக்கப்பட்டு குடியிருக்க வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

கடந்த நவம்பரில் காரைநகரில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கைகளால் அராலிக்கிராமத்தைச் சேர்ந்த நூற்றுக் கணக்கான குடும்பங்கள் நவாலியிலுள்ள பல பாடசாலைகளில் வந்து தங்கியிருந்தமையால் வகுப்புகளைச் சீரான முறையில் நடாத்த முடியாதிருந்தது.

பாடசாலை நிர்வாகத்தினர் எடுத்த பெருமுயற்சியால் இவ்விடம்பெயர்ந்த மக்களுக்கு பாடசாலைக்கு அண்மையிலை வெற்றுக் காணிகளில் குடிசைகள் அமைத்துக்கொடுத்து அவற்றில் குடியிருக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தற்பொழுது நவாலி மகா வித்தியாலயத்தில் வகுப்புகள் முன்புபோல் நடத்தப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. (109)

# இந்தியாவில் லொறி உரிமையாளர்களின் வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது

(புதுடில்லி)

கடந்த ஒரு வாரகாலமாக இந்தியாவில் நடைபெற்று வந்த லொறி உரிமையாளர்களின் வேலைநிறுத்தம் நேற்றுடன் விலக்கிக்கொள்ளப்பட்டது.

வீதிவரிகளை ரத்து செய்தல் உட்பட மற்றும் லொறி உரிமையாளர்களின் கோரிக்கைகளை பரிசீலனை செய்ய மத்திய அரசு இணங்கியதனையடுத்து இந்த வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது.

இந்த வேலைநிறுத்தத்தினால் அத்தியாவசிய பொருட்களின் விலைகள் அதிகரித்ததோடு பல தொழிற்சாலைகளின் உற்பத்திப்பொருட்களை சந்தைப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டிருந்தது. (கே)

# ராஜதந்திரியை காணவில்லை

[புதுடில்லி]

புதுடில்லியிலுள்ள ரஷ்ய ராஜதந்திரி ஒருவர் காணாமற் போயுள்ளார்.

இவர் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டிருக்கலாம் என பொலிஸார் நம்புகின்றனர். (கே)

# பாதை சீரமைப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு-பொத்துவில் பாதையை சீரமைப்பு செய்வதற்காக ஈரானிய தொழில்நுட்பக்குழுவினர் வந்துள்ளதாக தெரியவருகிறது. (59)

# இராசி பலன்

09-07-1992

வியாழக்கிழமை

(தமிழுக்கு ஆனி 25)

தசமி மு. இ. 10-22 வரை, சுவாதி பி. ப. 3-39 வரை அமிர்தசித்தயோகம், இராகு காலம் பகல் 1-28 முதல் 2-58 வரை, சுபநேரம் காலை 7-28 முதல் 8-58 வரை.

மேடம்: மங்களகரம், இஷ்டபோஜனம், காரிய சித்தி.

இடபம்: புதிதானவேலை, வழிநடாத்துதல், பணவரவு.

மிதுனம்: வீண் சிரமம், பயணதுன்பம், தேகசுகம்

கடகம்: கட்டுப்படுதல் பாபசிந்தை, அலைச்சல்.

சிங்கம்: சத்துருக்கள் வசமாதல், ஐசுவரியம், காரிய பலிதம்.

சன்னி: மனசந்தேகம், அபகீர்த்தி, சோகம்.

துலாம்: விந்தை விருத்தி, முயற்சி வெற்றி, பயணம்.

விருச்சிகம்: ஸ்திரி பயம், தற்பெருமை, தெய்வ தரிசனம்.

தனுசு: சகோதர துவேசம். தைரிய புத்தி, சந்தோசம்.

மகரம்: சத்துருலாபம், கர்ம சித்தி, நல்லபோஜனம்.

கும்பம்: மேலதிகாரிகள் துன்பம், யோசனை, பண முடை.

மீனம்: புத்திரர் விரோதம், மிருகபயம், கஷ்டம்.

ஜோஸ்யர்

# தெற்கில் மினிப்புயல்

[ஹினிதும]

நாட்டின் தென்பகுதியில் கடும்காற்றும்மழையும் பெய்ததோடு ஹினிதும பகுதியில் கடும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஹினிதுமயில் 50 மைல் வேகத்தில் காற்று வீசி மினி புயலை ஏற்படுத்தியது. மரங்கள் முறிந்து விழுந்ததோடு 10க்கு மேற்பட்ட வீடுகட்கு பலத்த சேதமேற்பட்டது. (கே

# சீயாக்காய் பவுடர் என போதைவஸ்து கடத்தல் இரு பெண்கள் கைது

(கொழும்பு)

சீயக்காய் பவுடர் எனக் கூறி, போதைப் பொருள் கடத்தி வந்த கொழும்புப் பெண்கள் இருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தால் நேற்று முன்தினம் கைதாகியுள்ளனர்.

இந்தியாவிலிருந்து வந்த இந்த இருபெண்களும், ஹெரோயின் போதைப்பொருளை, சீயக்காய் பவுடர் என கடத்தி வந்துள்ளனர்.

சுங்க அதிகாரிகளின் தீவிர சோதனையை அடுத்து இவர்கள் குட்டு அம்பலமாகியதும், இருவரும் கைதுசெய்யப்பட்டனர். (கே)

# கிழக்கில் இடம்பெற்ற வன்செயல் பற்றிய விசாரணை விபரங்களைவெளியிட வேண்டும்

[லண்டன்]

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற வன்செயல் சம்பவங்கள் குறித்த விசாரணைகள் பற்றிய விபரங்கள் வெளியிடப்பட வேண்டும் என சர்வதேச மன்னிப்புச்சபை அண்மையில் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

10 பக்கங்கள் கொண்ட அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: கிழக்கில் முஸ்லிம்களுக்கு ஆயுதம் வழங்கியதன் மூலம் கிழக்கில் வன்செயல் சம்பவங்களுக்கு அரசு வழிகோலியுள்ளது குறித்து அறிக்கையில் பலத்த கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மற்றும் கிழக்கில் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவங்களுக்கு முஸ்லிம் ஊர்காவற்படையும் பாதுகாப்பு படையின் சில உயர் அதிகாரிகளுமே பொறுப்பு எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் படுகொலைச் சம்பவம் குறித்து விசாரணை நடைபெற்றதை வரவேற்ற அக்குழு விசாரணை பற்றிய விபரங்கள் விரைவில் வெளியிடப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளது.

இதேவேளையில் மேற்படி சம்பவங்கள் பற்றிய விசாரணை அறிக்கைகள் பாதுகாப்பு அமைச்சில் தேங்கி கிடப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# இலங்கை விஜயம்

(கொழும்பு)

அமெரிக்காவின் 7-வது கடற்படை உயர்அதிகாரி இலங்கை வந்துள்ளார்.

இவர் இலங்கையிலுள்ள கடற்படை உயர் அதிகாரிகளையும் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளையும் சந்திக்கவுள்ளார். [கே)

# கலந்துரையாடல்

[உடுவில்]

சகல ஆசிரிய ஆலோசகர்களும் ஒவ்வொரு திங்கட்கிழமைகளிலும் பாடசாலைகளுக்கு சென்று ஆசிரியர்களுடன கலந்துரையாடல்களை மேற்கொள்ளவேண்டும் என்று யாழ். கல்விப்பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார். [109]

# மடு அகதி முகாமில் தொற்றுநோயினால் அகதிகள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

மன்னார் மடு அகதி முகாமில் தங்கியிருக்கும் அகதிகள் பலவித தொற்று நோய்களுக்குள்ளாகியிருக்கின்றனர்.

வயிற்றோட்டம், நெருப்புக் காய்ச்சல், மலேரியா, கண் நோய் போன்ற நோய்களால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

கடுமையாக நோய்வாய்ப்பட்டவர்கள் போக்குவரத்து வசதியின்மையால் வைத்திய சாலைக்குச் செல்லமுடியாத நிலையேற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்பகுதியில் கடும் வரட்சி நிலவுவதால் குடிநீர்த் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது. (56)

# பொது அறிவு, பேச்சு, கட்டுரை போட்டி

(உடுவில்)

யாழ்ப்பாண மாவட்ட சனசமூக நிலையங்களினூடாக பாடசாலை மாணவர்களிடையே பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, பொது அறிவுப்போட்டி ஆகிய போட்டிகளை நடத்தி பரிசுகள் வழங்கவுள்ளது.

சனசமூக நிலையங்கள் போட்டியாளர்களின் விண்ணப்பங்களை சேகரித்து ஜூலை மாதம் 12ம் திகதிக்கு முன்பதாக தமக்கு அனுப்பிவைக்குமாறு சம்மேளன செயலாளர் திரு. சண்முகலிங்கம் அறிவித்துள்ளார்.

இப்போட்டிகள் யாவும் ஜூலை மாதம் 17ம் திகதி காலை ஒன்பது மணிக்கு யாழ்ப்பாணம் வேம்படி உயர்தர மகளிர் கல்லூரியில் நடைபெறும். பொது அறிவுப் போட்டிகள் பொதுவாகவும், பேச்சு, கட்டுரைப் போட்டிகள் ஆறு பிரிவுகளாகவும் நடைபெறும்

ஆரம்ப பிரிவு [1,2ம் ஆண்டு 3 நிமிடம்] பாலர் பிரிவு [ஆண்டு 3-5-3 நிமிடம்] கீழ்ப் பிரிவு [ஆண்டு 6-8 வரை 3 நிமிடம்) மத்திய பிரிவு [ஆண்டு 9-11 வரை- 5 நிமிடம்) மேற் பிரிவு [ஆண்டு 12-13 வரை- 7 நிமிடம்] அதிமேற்பிரிவு [19 வயதுக்கு மேற்பட்டோர்- 7 நிமிடம்]

இப்போட்டிகள் சம்பந்தமாக மேலதிக விபரங்களை சனசமூக நிலையங்களின் சமாசங்களிலும், சம்மேளனத்திலும் பெற்றுக்கொள்ளலாம் என சம்மேளன செயலாளர் அறிவித்துள்ளார். (109]

# இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவின் ஆதரவுடன் யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வரும் உதைபந்தாட்டப்போட்டியில் யாழ். திருவள்ளுவர் கழகம், தொடர்மாடிக் கழகத்தை 1—0 கோல்களால் வெற்றிபெற்றது.

இப்போட்டிக்கு திரு. லோகநாதன், திரு. டொமினிக் ஆகியோர் பிரதம அதிதிகளாசுக் கலந்து கொண்டனர்.

இன்று நடைபெறும் முதலாட்டத்தில் குருநகர் மஞ்சள் அணியை எதிர்த்து வைக்கிங்ஸ் கழகம் மோதும். 2வது ஆட்டத்தில் சென். நீக்கிலஸ் கழகத்தை எதிர்த்து திருவள்ளுவர் கழகம் மோதும், இப்போட்டிகளுக்கான சகல ஏற்பாடுகளையும் யாழ்ப்பாண விளையாட்டு அதிகாரி திருமதி ரூபசிங்கம் மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது. (வி)

# நினைவஞ்சலிக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புகள் கலை பண்பாட்டுக் கழகம் நடாத்தும் எழுத்தாளர் கோவை மகேசன் நினைவஞ்சலிக் கூட்டம் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் இம்மாதம் 11-ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழக துணைப் பொறுப்பாளர் ஆ. தேவர் தலைமையில் நடைபெறும்.

திரு.சா.அ. தர்மரத்தினம், திரு. ஐயா சச்சிதானந்தம், திரு. எஸ். ரி. அரசு, திரு. க. சொக்கலிங்கம், பொன். பூலோகசிங்கம், திரு. தமிழ் மறவன், திரு. யோகரத்தினம் யோகி ஆகியோர் நினைவஞ்சலி உரையை நிகழ்த்துவார்கள். (சு)

ஆடிவேல்

# இந்திய கலைஞர்கள்

[கொழும்பு]

இம்முறை கொழும்பில் நடைபெறும் ஆடிவேல் விழாவிற்கு இந்திய கலைஞர்கள் வருகிறார்கள்.

கிளாரினட் வித்துவான் ஏ. கே சி. நடராஜன், மற்றும் தவில் நாதஸ்சுர வித்துவான்களும் வரவழைக்கப்பட்டுள்ளனர் [கே]

# சுகாதாரவசதி

(பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு செபமாலை மாதா ஆலயத்தில் தஞ்சமடைந்துள்ள அகதிகளின் சுகாதார வசதி கருதி தமிழர் அகதிகள் புனர்வகழ்வுக் கழகத்தினால் ஆறு தற்காலிக மலசல கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன, [72)

# ★ பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கை: சார்க் உடன்படிக்கை மூலம் திருப்தியடைய முடியாது

## - அமைச்சர் ஹேரத்

[கொழும்பு]

பயங்கரவாத ஒழிப்பில் 'சார்க்' பிராந்தியஉடன்படிக்கைகள் மூலம் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்குறித்து திருப்தியடைய முடியாது என்று வெளிவிவகாரஅலுவல்கள்அமைச்சர்திரு.ஹரோல்ட் ஹேரத் நேற்று கொழும்பில் நடைபெற்ற சார்க் வெளிநாட்டு அமைச்சர் மாநாட்டில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் கூறியதாவது: எனினும் போதைவஸ்து பாவனை, கடத்தல் முதலியவற்றைத் தடுப்பதில் பிராந்தியநாடுகள் கணிசமானமுன்னேற்றத்தை எய்தியுள்ளன' சார்க் பிராந்தியநாடுகளில் பயங்கரவாதத்தை தடுத்தல் பற்றிய ஆலோசனைகளை இலங்கையே முதன்முதலாக தெரிவித்தது. இது வெற்றியளிக்கவேண்டுமானால் பொதுவான சட்ட திட்டங்கள் அமைக்கப்படவேண்டும் அப்போது பிராந்திய பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றார். (மா)

# கப்பல் மூலம் பொருட்களை அனுப்பக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கப்பல் மூலம் உடனடியாக உணவுப்பொருட்களை அனுப்பிவைக்கும்படி அரச சார்பற்ற தொண்டர் ஸ்தாபனங்களின் இணையம், கொழும்பிலுள்ள இணையத்தின் தலைமைச்செயலகத்துக்கு அவசரவேண்டுகோள்ஒன்றை நேற்றுஅனுப்பிவைத்துள்ளது.

'பலவேகய-2' தொடர்ந்து நடைபெறுவதனால் லொறிகள் மூலம் கொண்டுவரப்பட்ட உணவுப்பொருட்கள் வவுனியா, கிளிநொச்சிப்பகுதிகளில் தடைப்பட்டு நிற்கின்றது. இதனால்அகதிகள்முகாம்களைப் பராமரிப்பதில் பெரும் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளது.

ஆகவே இந்த இக்கட்டான நிலைமைச் சமாளிப்பதற்கு உடனடியாக கப்பல் மூலம் உணவுப்பொருட்களை அனுப்பிவைக்கும்படியும் கேட்கப்பட்டுள்ளது. (வி)

# கொள்ளையை எதிர்த்து சென்னையில் ஆர்ப்பாட்டம்

(சென்னை)

வடசென்னையில் பெரும்பூருக்கும் தமிழக அரசின் பிரதான செயலகத்திற்கும் இடையே சுமார் 250 காய்கறி வியாபாரிகள் நேற்று ஆட்சேப ஊர்வலம் ஒன்றை நடாத்தினர்கள்.

பெரும்பூரில் 3 வியாபாரிகளிடம் கொள்ளையர்கள் தலா 5,000 ரூபாவைக் கொள்ளையடித்துக்கொண்டுபோன சம்பவம் தொடர்பான புகாரை பதிவுசெய்யச் சில பொலிஸ் நிலையங்கள் மறுத்துவிட்டமையைக் கண்டித்தே இந்த ஆட்சேப ஊர்வலம் நேற்று நடத்தப்பட்டதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர். [க]

## இன்று

(வட்டுக்கோட்டை)

சித்தன்கேணி கலைநகர் நேருஜி கிராம முன்னேற்றச் சங்க சனசமூக நிலைய 36 ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 6 மணியளவில் நிலைய முன்றலில் நிலையத்தலைவர் தலைமையில் நடைபெறவுள்ளது. (139)

## இன்று பிரியாவிடை

(யாழ்ப்பாணம்)

யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரியின் முன்னாள் அதிபர் வண. பிரான்சிஸ் ஜோசப் அடிகளாரின் பிரியாவிடை வைபவம், இன்று நடைபெறுகிறது.

மேற்படி கல்லூரி ஆசிரியர், மாணவர்களால் நடாத்தப்படும் இப்பிரியாவிடை வைபவம், நேற்று நடைபெறுமென செய்தி வெளியானது தவறாகும். [வி]

# இலங்கை கடற்படையிடம் இந்திய மீனவர் சிக்கினர்

(சென்னை)

இராமேஸ்வரத்திலிருந்து ஆழ்கடல் பகுதியில் மீன்பிடிப்பதற்காகச் சென்ற 9 இந்திய மீனவர்கள் இதுவரை காணப்படாததால் இலங்கை கடற்படையினர் அவர்களைப் பிடித்திருப்பார்கள் என அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த யூன் 30-ம் திகதி மீன்பிடிக்கச் சென்ற இந்த 9 பேரும் இதுவரை காணப்படவில்லை.

இவர்களின் படகுகள் இலங்கைக் கடற்கரையில் இருப்பதை இந்திய கடற்படையினர் கண்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [கே]

# டிக்ஷிற்றை விளக்கமளிக்க ஆணைக்குழு உத்தரவு

(சென்னை)

தமிழீழக் கொள்கையின் தோற்றுவாய், அது குறித்து இந்தியாவின் நிலைப்பாடு மற்றும் இது தொடர்பான விடயங்கள் குறித்து விளக்கமளிக்குமாறு இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலர் ஜே என். டிக்ஷிற்றை ஜெயின் விசாரணை ஆணைக்குழு கோரியுள்ளது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலைக்கு காரணமான சம்பவங்களின் விளைவுகள் பற்றி தெரிவிக்குமாறு ஜெயின் விசாரணை ஆணைக்குழு ஜே. என். டிக்ஷிற்கும், முன்னாள் தமிழக பொலிஸ் அதிபர் மோகனதாசுக்கும் அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது

கடந்த வார ஆரம்பத்தில் இந்த அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. (கே)

# கிழக்கில் மோதல் சிப்பாய் பலி

(கொழும்பு)

திருகோணமலை மாவட்டத்தில் பாலம்போட்டாறுக்கும் குரங்குப்பாலத்திற்குமிடையில் நேற்று விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா பாதுகாப்புப் படையினருக்கும் இடையில் மோதல்கள் இடம் பெற்றதாகவும் அதில் ஒரு இராணுவ சிப்பாய் கொல்லப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறுவூர் சித்தாண்டிப்பகுதியில் சிறு சிறு மோதல்கள் இடம்பெற்றதாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (மா)

## நாளை தபால் விநியோகம்

[யாழ்ப்பாணம்]

குமண கப்பலில் கொண்டுவரப்பட்ட தபாற் பொதிகள், இன்று இறக்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இன்று பிற்பகல் யாழ். தபால்நிலையத்திற்குப் பொதிகள் வந்து சேர்ந்ததும், நாளை வெள்ளிக்கிழமை முதல் தபால் விநியோகம் நடைபெறுமென யாழ். தபால் நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். வி)

# ஆசிரியர் பரீட்சை வினாத் தாள்கள் வந்தன

(யாழ்ப்பாணம்)

ஆரம்ப கல்வி பயிலுனர் ஆசிரியா தேர்வுக்கான வினாப் பத்திரங்கள் பருத்தித்துறை துறைமுகத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கு செஞ்சிலுவைச் சங்க அனுசரணையுடன்நேற்று மாலை கொண்டுவரப்பட்டுள்ளது.

திட்டமிட்டபடி யாழ். மாவட்டத்தில் பரீட்சைநடைபெறும் என்று யாழ். கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

—இதேநேரம் ஆகஸ்ட் மாதம் நடைபெறவிருக்கும் க பொ. த. (உயர்தர 1992) பரீட்சையும், யாழ். மாவட்டத்தில் நடாத்துவதற்கு சகல ஒழுங்குகளும் செய்யப்பட்டு வருகின்றது என பரீட்சை ஆணையாளர் தெரிவித்ததாக யாழ். கல்விப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (சு)

## இராணுவ

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதன் மூலம் படையினர் மத்தியில் பாரதூரமான விளைவுகள் ஏற்படக்கூடிய சாத்தியங்கள் இருப்பதாகவும் கூறப்படுகிறது. (சி)

## இலங்கை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மாதம் 20ம் திகதி பெரும் ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.

இவ் வார்ப்பாட்டத்தை பாட்டாளி மக்கள் கட்சி, இந்திய குடியரசுக்கட்சி, இந்திய மக்கள் முன்னணி, எம். ஜி. ஆர். அ. தி. மு. க கட்சி என்பன நடாத்தவுள்ளன. [சி]

## இந்திய

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

விசேட கமிஷனை ஜெயின் கமிஷன் தெரிவித்துள்ளது.

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக பல்வேறு கோணங்களிலும் மிகநுணுக்கமாக ஆராய்ந்துவரும் இக்கமிஷன் இந்திய வெளியுறவு செயலர் திரு. ஜே. என். டிக்ஸிற், மற்றும் தமிழக முன்னாள் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் மோகனதாஸுக்கும் இதற்கான அறிவித்தல்களை அனுப்பியுள்ளது. (க)

## படைகுவிப்பு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த இரு மாத காலத்திற்குள் 20க்கு மேற்பட்ட காவலரண்களை அமைப்பதில் துருப்புக்கள் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. மேலும் காவலரண்களில கடமையாற்றும் படையினரின் எண்ணிக்கையும் பெருமளவு அதிகரிக்கப்பட்டுள்ளது.

## பொருட்கள் இறக்கப்படுகின்றன

[யாழ்ப்பாணம்]

குமண கப்பலில் வந்திருக்கும் உணவுப் பொருட்களை இறக்கி, லொறிகள் மூலம் கொண்டு செல்வதற்குப் பாதுகாப்பு அமைச்சு அனுமதி அளித்ததைத் தொடர்ந்து, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் நேற்றுப் பருத்தித்துறைத் துறைமுகத்துக்குச் சென்றனர்.

மேற்படி கப்பலில் உள்ள பொருட்களை இறக்கும் வேலைகள் நேற்று முழு அளவில் நடைபெற்றதாகக் கூறப்படுகின்றது. [வி]

## 18,841 குடும்பங்களுக்கு

[1-ம்பக்கத் தொடர்ச்சி]

தொடர்ந்தும் விநியோகிப்பதற்கான நடவடிக்கைகளில் தமிழீழ காவல்துறையினர் ஈடுபட்டுவருகின்றனர். சமூக நலன் கருதி எடுக்கப்படும் இந்நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு நல்கிவரும் சகல பொதுமக்களுக்கும் தமது நன்றியை காவல்துறை தெரிவித்துள்ளது.

இதே சமயம் ஒரு சில வர்த்தகர்கள் தாமாகவே முன்வந்து காவல்துறையின் உதவியுடன் மண்ணெண்ணையைப் பொது மக்களுக்கு விநியோகிக்க முன்வந்திருப்பதும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். பொதுமக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் எதையும் எதுவித தயக்கமின்றி விநியோகிக்குமாறு சகல வர்த்தகர்களையும் காவல்துறை கேட்டுள்ளது.

## பருத்தித்துறை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தித்துறை கடலில் கடந்த 6-ம் திகதி அதிகாலை வள்ளத்தில் மீன்பிடிக்கச் சென்றபோது கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.

இப்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த வேறு மீனவர்கள் வள்ளங்களிலிருந்து குதித்து நீந்திக் கரை சேர்ந்தனராம். [52]

## வீழ்ந்த

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீலங்கா அரசு தகவல் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்ட மேலதிக விபரங்களில் ஸ்ரீலங்கா விமானப் படையிடம் இருந்த இரு இராட்சத விமானங்களில் ஒன்று ஏற்கனவே பழுதடைந்து இரத்மலானை விமான நிலையத்தில் தரித்து நிற்கிறது. மற்றைய விமானம் புலிகளால் வீழ்த்தப்பட்டுள்ளது.

விமானத்தில் சென்றுகொண்டிருக்கும்போது கொல்லப்பட்ட 5 விமானிகளின் பெயர் விபரங்களை அரசு வெளியிட்டுள்ளது. ஸ்குவட்றன் லீடர் லைசால் கசீர், பிளைட் லெப்டினன்ட் பிரியந்த பெர்ணன்டோ, பிளைட் லெப்டினன்ட் சுரேஷ் மெண்டிஸ், சமந்த ரத்நாயக்கா, பிரேமரத்ன விஜயக்கோன் ஆகியோரே கொல்லப்பட்டவர்களாவர். [க]

## ஏன் புலிகளை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இருப்பார்கள் என்றும் புலிகள் செயல்படும் வரை தமிழகத்திற்கு ஆபத்து இருக்கும் எனவும் உள்ளூர் பத்திரிகை ஒன்றுக்கு செல்வி ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

புலிகளால் தமிழகத்திற்கு அச்சுறுத்தல் இருப்பதால தீவிரவாதத்தை அழிப்பதன் மூலம் இலங்கையின் தமிழர் பிரச்னைக்குத் தீர்வுகாணப்படவேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஆயிரம் கி மீ, நீளமுள்ள கரையோரப் பகுதி நெடுகிலும் கண்காணிப்பதற்காக மத்திய அரசின் றிசேவ் பொலிஸ் படையின் 10 பிரிவுகள் தமிழகத்தின் விஷேட பொலிஸ் மற்றும் ஆயுதம் தாங்கிய றிசேவ் பொலிஸ் படைகள் 10, ஐந்து கப்பற் படை பிரிவுகள் அமைக்கப்பட்டு 35 பொலிஸ் சோதனை சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளது.

இதுநாட்டில் பொருளாதாரத்தில் பெரும் செலவை ஏற்படுத்தியிருப்பதாகவும் இந்த நிலைமை தொடர்ந்தும் ஏற்படமுடியாதென்றும் ஜெயலலிதா கூறியுள்ளார். (சி)

## துப்பாக்கி நபர்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சமயநிகழ்ச்சிகளில் கலந்துகொண்ட பக்தர்கள் மீது ஆயுதம் ஏந்திய இனந்தெரியாத கோஷ்டியினர் துப்பாக்கியால் சுட்டதில் ஒருசிறுவன் கொல்லப்பட்டதாகவும் ஒரு சிறுமி காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஹமில்டன்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சார்பு லேக்கவுஸ் பத்திரிகையான 'ஒப்சேவர்' கடுமையாக விமர்சனம் செய்துள்ளது.

ஒப்சேவர் மேலும் விமர்சிக்கையில், ஜெனரல் ஹமில்டன் வனசிங்க தலைமையிலும் ஜெனரல் சிறில் ரணதுங்க ஆலோசனையிலும் முன்னேற்றம் கண்டபடையினர் தற்போது லெப. ஜெனரல் சிசில் வைத்யரத்ன தலைமையில் முன்னேற்றம் அடைந்துள்ளது.

இதனால் முப்படைகளையும் உள்ளடக்கிய கூட்டுப்படைத் தலைமையகமும், பாதுகாப்பு அமைச்சின் செயலர் பதவியும் தேவைதானா என்றும் வினவி இவ்விருவருக்கும் எதிராகப் பல கேள்விகளை எழுப்பியுள்ளதுடன், இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்னவையும் வெகுவாகப் பாராட்டியுமுள்ளது. (சி)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63ம்இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு யூலை மாதம் 09ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a as a News paper at the Genera' Post office Srt Lanka under Licence Number B/10336/8